**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10015

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 11.11.2025

Accepted: 20.12.2025

Published: 01.01.2026

Citation:
Murugesa Pandian, N. "A Comparative Study of Pandian, The Character of a Tamil Novel Puyalile Oru Dhoni and The Characters of World Novels." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 1–11.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10015

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Comparative Study of Pandian, The Character of a Tamil Novel Puyalile Oru Dhoni and The Characters of World Novels

**N. Murugesa Pandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

*In an environment where the novel tends to be a monotonous narrative, the novel 'Puyalile Oru Dhoni (1972)' written by P. Singaram stands out. The Pandian portrayed by P.Singaram is completely different from the characters that have been fabricated in Tamil novels for many years, presenting family, tradition, and culture. The character of Pandian can be compared to the main characters in Russian novelist Mi.Yu. Lermontov's A Hero of Our Time (1840), American novelist Ernest Hemingway's A Farwell to Arms (1929), American novelist Charles Bukowski's Post Office (1971), and Japanese novelist Haruki Murakami's Norwegian Wood (1987). Foreign novelists, including P. Singaram, have depicted young people living in harmony with and in conflict with current life.*

***Keywords:*** *Novel, Criticism, P.Singaram, Puyalile Oru Dhoni, Mi.Yu. Lermontov, A Hero of Our Time, Ernest Hemingway, A Farwell to Arms, Haruki Murakami, Norwegian Wood, Comparative Study, Character Analysis.*

**References**

1. Singaram.P. Puyalile Oru Dhoni, Chennai: Discovery Book Palace, 2016.
2. Lermontov, Mi.Yu. A Hero of Our Time. P.Somasundaram (Tr.). Moscow; Progress Publishing House, 1966.
3. Ernest Hemingway. A Farwell to Arms. S.S. Sivasamy (Tr.). Bombay: Pearl Publications. 1958.
4. Haruki Murakami. Norwegian Wood. K. Subramanian (Tr.). Pollachi: Ethir Publication, 2014.
5. Charles Bukowski. Post Office. Balakumar Vijayaraman(Tr.). Pollachi: Ethir Publication, 2016.

# புயலிலே ஒரு தோணி நாவல் கதைமாந்தரான பாண்டியனும் உலக நாவல்களின் கதைமாந்தர்களும்: ஒப்பாய்வு

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*நாவல் என்றால் ஒற்றைத்தன்மையுடன் கதை சொல்லும் போக்கு நிலவிய சூழலில், ப.சிங்காரம் எழுதிய 'புயலிலே ஒரு தோணி (1972)' நாவல், தனித்து விளங்குகிறது. குடும்பம், மரபு, பண்பாடு போன்றவற்றை முன்வைத்துப் பல்லாண்டுகளாகத் தமிழ் நாவல்களில் புனையப்பட்ட கதைமாந்தர்களில் இருந்து ப.சிங்காரம் சித்திரிக்கிற பாண்டியன், முற்றிலும் மாறுபட்டவன். தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ரஷிய நாவலாசிரியரான மி.யூ. லேர்மன்தவ்வின் நம் காலத்து நாயகன் (1840), அமெரிக்க நாவலாசிரியரான எர்னெஸ்ட் ஹெமிங்வேயின் போரே, நீ போ (1929), அமெரிக்க நாவலாசிரியரான சார்லஸ் புக்கோவ்ஸ்கியின் அஞ்சல் நிலையம் (1971) ஜப்பானிய நாவலாசிரியர் ஹாருகி முரகாமியின் நோர்வீஜியன் வுட் (1987) ஆகிய நான்கு நாவல்களின் முதன்மைப் பாத்திரங்களுடன் பாண்டியன் பாத்திரத்தை ஒப்பிட முடியும். நடப்பு வாழ்க்கையுடன் இயைந்தும் முரண்பட்டும் வாழ்கிற இளைஞர்களைப் பற்றி ப.சிங்காரம் உள்ளிட்ட அயல்நாட்டு நாவலாசிரியர்கள் சித்திரித்துள்ளனர்.*

***முக்கியச் சொற்கள்:*** *நாவல், திறனாய்வு, ப.சிங்காரம், புயலிலே ஒரு தோணி, மி.யூ.லேர்மன்தவ், நம் காலத்து நாயகன், எர்னெஸ்ட் ஹெமிங்வே, போரே நீ போ, ஹாருகி முரகாமி, நோர்ஜியன் வுட், ஒப்பாய்வு, கதைமாந்தர் படைப்பு*

யதார்த்த வாழ்க்கையில் யாரோ ஒருவர் நடந்து முடிந்த சம்பவத்தைச் சொல்கிறபோது, கதையுடன் கதைமாந்தர்களும் உருவாகின்றனர். கதைமாந்தர்களுடன் நினைவுகளின் வழியாக வாசகனுடைய உரையாடல் தொடங்குகிறது. கதையின் மீதான பேச்சுக்கள் கதைமாந்தரை முன்வைத்து விரிகின்றன. கதையைக் கேட்பவரின் நினைவுகளில் கதைமாந்தர் உயிரோட்டத்துடன் வாழ்கிறார். எந்தவொரு கதைக்கும் மையப்பொருள் முக்கியம் என்றாலும் கதையைத் தொடங்கி, நடத்திச் செல்லவும் முடித்திடவும் கதை சொல்லிக்கு மனிதர்கள் தேவைப்படுகின்றனர். நாவலை வாசிக்கும்போது கதையாடலில் முதன்மையாக இடம்பெறுகிற கதாபாத்திரங்களும், வாசிப்பிற்குப் பின்னர் மனதில் தங்கியிருக்கிற பாத்திரங்களின் பெயர்களும் கவனத்திற்குரியன. ஒவ்வொரு கதைக்குப் பின்னரும் எளிய அல்லது மாபெரும் மனிதர்கள் இருக்கின்றனர். தொன்மக் கதையாடலில் பிரதிகளின் வழியாகக் கதைமாந்தர்கள் காலந்தோறும் தொடர்ந்து பயணிக்கின்றனர். வரலாற்று நாவல்களில் இடம்பெறும் அதியற்புத நாயகர்கள் பிரதியிலிருந்து வெளியேறி நடப்பு அரசியலில் கலக்கின்றனர். கதாசிரியரின் வாழ்க்கை அனுபவம் அல்லது புனைவு சார்ந்து படைப்பில் உருவாக்கப்படும் கதைமாந்தர்கள், கதையின் வழியாக முடிவற்ற கேள்விகளை எழுப்புகின்றனர். வயது, தோற்றம், நடையுடை பாவனை, பார்வை எனப் புறத்திலும் பண்பு, பேச்சு, சிந்தனை என அகத்திலும் நாவலாசிரியரால் சித்திரிக்கப்படும் மொழி, வாசிப்பில் கதைமாந்தர் பிம்பத்தைப் புனைகிறது.

தமிழில் கதையாடலுக்கு அழுத்தம் தந்திட பெரிதும் கதைமாந்தர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது.

நா.பார்த்தசாரதி படைத்த குறிக்கோளுடன் செயல்படுகிற அரவிந்தன், பூரணி கதாபாத்திரங்கள், குறிஞ்சி மலர் நாவலில் இருந்து வெளியேறி, அறுபதுகளில் தமிழர்களின் மனதில் வாழ்ந்து கொண்டிருந்தது தற்செயலானது அல்ல. வரலாற்றில் தனிநபர் பாத்திரம் ஆளுமையான நிலையில், நவீன இலக்கியப்படைப்புகளில் கதைமாந்தர்கள், எதிர்மறைப் பண்புகள் மூலமாகவும் இருப்பை உறுதி செய்கின்றனர்.

சகமனிதர்களுடன் சகித்து வாழ்வதுதான் காலந்தோறும் பெரிய சவால். ஒவ்வொரு குழந்தையும் சமூகம் குறித்த புரிதலுடன், சமூக விதிகளுடன் ஒத்திசைந்து வாழுமாறு தகவமைக்கப்படுகின்றன. விதிவிலக்காகத் திட்டமிட்டுச் செயல்படுகிற ஆண்களின் உலகம் எப்பொழுதும் பொதுபுத்தியில் இருந்து விலகி இருக்கிறது. ஒட்டுமொத்தச் சமூக மரபுகளை மீறி, தன்னிச்சையுடன் சுயமாக வாழ்ந்திட முயலுகிறவர்கள், பிறரை ஒதுக்குவதுடன் தன்னையும் ஒதுக்கிக் கொள்கின்றனர். குறிப்பாகக் குடும்பம், காதல் தொடங்கி எல்லாவற்றிலிருந்தும் அந்நியப்பட்டு, இருப்புடன் தொடர்ந்து முரண்படுகின்றனர். சாகசம், கலகம் மூலம் மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாகிற கதைமாந்தர்களைப் படைப்பதில் நாவலாசிரியர்கள் காலந்தோறும் ஆர்வத்துடன் உள்ளனர். தமிழைப் பொறுத்தவரையில் நாவல் என்றால் ஒற்றைத்தன்மையுடன் கதை சொல்லும் போக்கு நிலவிய சூழலில், ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி (1972)' நாவல், தனித்து விளங்குகிறது. குடும்பம், மரபு, பண்பாடு போன்றவற்றை முன்வைத்துப் பல்லாண்டுகளாகத் தமிழ் நாவல்களில் புனையப்பட்ட கதை மாந்தர்களில் இருந்து ப.சிங்காரம் சித்திரிக்கிற பாண்டியன், முற்றிலும் மாறுபட்டவன்.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ரஷிய நாவலாசிரியரான மி.யூ.லேர்மன்தவ்வின் நம் காலத்து நாயகன் (1840), அமெரிக்க நாவலாசிரியரான எர்னெஸ்ட் ஹெமிங்வேயின் போரே, நீ போ(1929), அமெரிக்க நாவலாசிரியரான சார்லஸ் புக்கோவ்ஸ்கியின் அஞ்சல் நிலையம் (1971) ஜப்பானிய நாவலாசிரியர் ஹாருகி முரகாமியின் நோர்வீஜியன் வுட் (1987) ஆகிய நான்கு நாவல்களின் முதன்மைப் பாத்திரங்களுடன் பாண்டியன் பாத்திரத்தை ஒப்பிட முடியும். நடப்பு வாழ்க்கையுடன் இயைந்தும் முரண்பட்டும் வாழ்கிற இளைஞர்களைப் ப.சிங்காரம் உள்ளிட்ட அயல்நாட்டு நாவலாசிரியர்கள் சித்திரித்துள்ளனர். ஒருவிதமான சுய பகடி, முரட்டுத் துணிச்சல், தொட்டாச்சிணுங்கி மனநிலையுடன் இளம்வயதிலே அளவுக்கதிகமாக முதிர்ந்த மனநிலையுடன் எல்லாவற்றிலும் இருந்து விலகியவர்களின் மனம், இந்த வாழ்கையின் முடிவு எங்கே எனத் தவிக்கிறது. உடல் சார்ந்த கொண்டாட்டமான மது அருந்துதல், விரும்பிய பெண்களுடன் விருப்பத்துடன் உடலுறவு கொள்ளுதல் என இருப்பில் இருந்து அந்நியமாகிற இளைஞர்களைக் கதைமாந்தர்களாக நாவல்கள் சித்திரித்துள்ளன.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியின் போது, தமிழகத்திலிருந்து தென்கிழக்காசிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்கொண்ட வாழ்க்கைப் பின்புலத்தில் எழுதப்பட்ட புயலிலே ஒரு தோணி நாவல், வழமையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. தமிழ்ச் சமூகம், காலங்காலமாக நம்பிக் கொண்டிருக்கிற மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்குகிற பாண்டியன், இன்னொரு நிலையில் பூமியில் மனித இருப்புக் குறித்து ஆழமான கேள்விகளை எழுப்புகிறான். வெறுமனே கதை சொல்வது மட்டும் நாவலாசிரியர் ப.சிங்காரத்தின் நோக்கமல்ல. ஏன் இப்படியெல்லாம் மனிதர்கள்

இருக்கின்றனர்? இந்த வாழ்க்கையின் முடிவு எங்கே? மரணத்தின் நிழல் எங்கும் படர்கையில் என்ன செய்ய முடியும்? அதிகாரம் மனித உடல்களை ஏன் வதைக்குள்ளாக்க வேண்டும்? பொங்கிடும் காமத்தின் வெக்கையில் வதங்கிடும் உடல்களின் வேட்கை முடிவற்றதா? பாண்டியன் உள்ளிட்ட கதைமாந்தர்கள் வாசிப்பின் வழியாகப் பிரதியில் இருந்து வெளியேறி வாசகரின் மனதில் புதிய கதைகளை உருவாக்குகின்றனர். பெரும்பாலான வாசகர்கள், பாண்டியன் என்ற பாத்திரத்தின் மீது உணர்ச்சிகளைக் கொட்டி, முதலீடு செய்வது புனைவில் சாத்தியமாகிறது. சாகசக்காரனான பாண்டியன் குறித்த கதையாடலில் வாசகர்கள் அளவற்ற உணர்ச்சிப் பெருக்கில் திளைத்தல் வாசிப்பில் வெளிப்படுகிறது. யதார்த்த எழுத்தின் புனைவுகளை உண்மை என்று நம்பி, பாண்டியனுடன் ஒன்றுதல், நாவல் புனைவாக்கத்தில் நிகழ்கிறது.

பாண்டியன் பற்றிய புனைவு, கெட்டி தட்டிப்போன தமிழர் வாழ்வியலின் மீது வீசப்பட்ட பெரிய பாறாங்கல். பொதுப் புத்தி மதிப்பீடுகளைச் சிதைத்து எழும் பாண்டியன் சாகசக்காரன், புரட்சிக்காரன், கலகக்காரன், அராஜகவாதி. ஆயிரமாண்டுகளாக நிலவிடும் வைதிக சநாதனத்தின் ஆதிக்கம் காரணமாகப் பிறப்பு, பால் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை இன்றும் தொடர்கிறது. தமிழர் பண்பாடு, நாகரிகம் என்று சொல்லப்படுவது கூட உயர்சாதி, ஆதிக்க சாதியினரின் கருத்தியல் ஒழுங்குடன் வடிவமைக்கப்பட்டதாகும். எது செய்ய வேண்டும்? எது செய்யக்கூடாது என்பன பற்றிக் கறாரான வரையறைகள் நிலவுகின்றன. பூகோளத்தின் மீதான பிரமாண்டமான அனுபவங்கள் குறித்து உற்சாகத்துடன் கிளர்ந்தெழும் பாண்டியனுக்கோ எதுவும் பொருட்டல்ல. பாண்டியன், ஒழுங்கற்ற விதிகளின் அடிப்படையில் எல்லாவற்றையும் நொறுக்கிவிட்டுத் தன் மூப்பாகச் செயலாற்றுகிறான். தேர்ந்த சாகசக்காரன்/ கலகக்காரன் எவ்வாறு செயல்படுவான் என்பதற்கு இலக்கணமாகப் பாண்டியன் விளங்குகிறான். எது குறித்தும் தீர்மானகரமான நோக்கு அவனுக்கு உண்டு. விதிகளற்ற வாழ்தலைத் தேடி அலையும் பாண்டியனின் செயற்பாடு, ஒவ்வொரு நாளும் மாறிக் கொண்டிருக்கிறது. பொதுப்புத்திக்கு எதிரான போக்கு, சாகசச் செயலில் ஆர்வம், நண்பர்களுடன் விவாதம், மது அருந்துதல், அளவற்ற பெண்களுடன் தொடர்பு, மரணம் குறித்து அக்கறையின்மை, இடம்பெயர்ந்து கொண்டேயிருத்தல், பரபரப்பான மனநிலை போன்ற போக்குகளின் குவிமையமாகப் பாண்டியன் இயங்குகிறான்.

எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குகிற பாண்டியன் இடைவிடாமல் பெட்டியிலிருந்து உருவியெடுத்துச் சிகரெட்டைப் புகைப்பவன்; குடிப்பதில் ஆர்வம் மிக்கவன்; கணக்கற்ற வேசைகள்/ பெண்களுடன் உறவு கொள்பவன். மரபு வழிப்பட்ட பிம்பத்தைச் சிதைக்கும் இயல்புடைய பாண்டியனுக்குப் 'போர்' மிகவும் விருப்பமானதாகிறது. அவனுடைய செயலின் விளைவாக 'மரணம்' காத்திருப்பது அவன் அறியாத விஷயமல்ல. இருப்பின் நிச்சயமின்மை குறித்து அக்கறையுடையவன், எதிர்நிலையில் மரணத்தை ஒன்றுமற்ற நிகழ்வாகக் கருதுகிறான். அடுத்தடுத்து ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம், அவனை இயக்குகிறது. சாகசச் செயல்கள் தொடர வேண்டுமென்ற விருப்பத்தினால் மரணத்தை மறந்துவிட்டு, செயலில் ஈடுபடுவது பாண்டியனின் இயல்பு.

அன்னெமர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றிய பாண்டியன் ஐ.என்.ஏ. ராணுவத்தில் லெப்டினண்டாகச் சேர்ந்தவுடன் எதற்கும் துணிந்தவனாக மாறுகிறான். போருக்குப் பின்னர் பிரிட்டிஷ் ராணுவத்தினரிடம் மேனாள் ஐ.என்.ஏ. வீரர்களைக் காட்டிக்கொடுத்த

துரோகியான சுந்தரத்தைத் தந்திரமாகக் கொல்கிறான். பாண்டியன் பிறரைக் கொல்லும் போது என்னவகையான மனநிலையிலிருந்தான் என்பதற்கு நாவலில் பதிவு இல்லை. சுந்தரம் உயிருக்காகக் கெஞ்சும்போது 'மரணத்தைக் கௌரவமாக ஏற்றுக்கொள்' என்று அறிவுரை சொல்கிறான். மரணத்தின் விளிம்பைத் தொட்டுவிட்டு மீளும் கட்டங்களில்கூட பாண்டியன் பெரியஅளவில் அலட்டிக் கொள்ளவில்லை.

பெண்கள் குறித்த பாண்டியனின் அணுகு முறை தனித்துவமானது. பள்ளி மாணவப் பருவத்தில் வயதான பெண்ணால் பாலியல் வன்முறைக்குள்ளான பாண்டியனின் வாழ்க்கை, இளவயதிலே அவனுடைய மன ஒழுங்கைச் சிதலமாக்கி விட்டது. குயவர்பாளையம் தொடங்கி, அவனுடைய வாழ்க்கையில் கணக்கற்ற விலைமகளிர் குறுக்கிடுகின்றனர். கப்பலில் பழக்கமான இன்னொருவனின் மனைவியை அழைத்துக்கொண்டு போய் சென்னையில் மூன்று நாட்கள் தனியே தங்குகிறான். அவனை நேசிக்கும் அற்புதமான பெண் அயிஷாவின் சிநேகமும் அவனது அகத்தில் மாற்றம் ஏற்படுத்தவில்லை. பாலியல் வேட்கை காரணமாகப் பெண்களுடன் இயல்பாக நிகழ்ந்திடும் பாலியல் உறவுகள் ஒருபுறம் எனில், குடும்பத்தில் மனைவியுடன் மட்டும் பாலுறவு என்ற நெறியுடன் வாழ்தல் இன்னொருபுறம் அவனைத் துரத்துகிறது. ஒழுங்கு- குற்ற மனம் என்ற எதிரிணையில் தத்தளிக்கிறான். மந்தையிலிருந்து பிரிந்தவன் எனத் தன்னைக் கருதுகிறவன், எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கியே இருக்கிறான்.

பெண் மயிலே! முடியாது. முடியாது. நான் தாலி கட்டும் வகையைச் சேர்ந்தவனல்லன். விலங்கு போட்ட தொழுவ வாழ்க்கை எனக்கு ஒத்து வராது. கண்மணியே கேள்: தாயின் பாதுகாப்பில் இருக்கவேண்டிய காலத்தில் வேசையரின் மார்பில் மிதந்தேன். மனையாளின் அரவணைப்பில் அடங்க வேண்டிய வயதில் மனையறத்தை வெறுத்து மனம் குழம்பித் திரிகின்றேன். பொன்னே மணியே புனை பூங்கோதாய்! என் இல்லத்தரசியாக நீ இருக்க உடன்படுவது என் பாக்கியமே. ஆனால், நானோ இல்லறத்தை வெறுக்கும் இளைஞன். முடியாததால் வெறுப்பவனின் வெறுப்பைவிட முடிந்திருந்தும் வெறுப்பவனின் வெறுப்புமிகமிகக்கொடிதன்றோ!காரளகப் பெண் சிகாமணியே! நான் மந்தையில் இருந்து விலகிப் பிரிந்த ஓடுகாலி. பிரிந்ததால் மந்தையின் வெறுப்புக்கும், பிரிய நேர்ந்ததால் தன் வெறுப்புக்கும் உள்ளாகி இந்தப் பரந்த வையகத்தில் இடமின்றி, ஒட்டிப்பற்ற ஈரப்பசை காணாமல் அலைந்து திரிகிறேன்; அலைந்தலைந்தே திரிகிறேன்; அலைந்தலைந்து திரிந்தே அழிவேன் அயிஷாவுடனான உறவைத் தொடர்ந்திட முடியாமல் தத்தளிக்கிற பாண்டியனின் மனதில் தோன்றிய உணர்வுகள், அழுத்தமானவை. காதல் குறித்த பாண்டியனின் மனவோட்டம், தமிழ்க் காதல் மரபில் இருந்து முற்றிலும் வேறுபட்டது.

இக்கட்டான நேரத்தில் என்ன செய்யவேண்டுமென்று உடனுக்குடன் முடிவெடுக்கும் திறன் பாண்டியனுக்கு உண்டு. அந்த முடிவின் விளைவாகத் தோன்றவிருக்கும் சிக்கலையும் எதிர்கொள்ள வேண்டியது தான் என்று நம்புகிறான். சிலவேளைகளில் அது குறித்து அவனுக்கு அக்கறை இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் தான் விரும்பியவற்றை அல்லது அவனிடம் ஒப்படைக்கப்பட்ட செயலை எவ்வாறாயினும் முடித்துவிடத் திட்டமிட்டு நிறைவேற்றுகிற பாண்டியனுக்கு புகழ், துணிச்சல், வீரம் போன்றவற்றில் மரியாதை இல்லை. அவை, அவனைப் பொறுத்தவரையில் அபத்தமானவை.

பாண்டியன் சாகச நாயகனுக்கே உரிய மனநிலையுடன் சிக்கலான பிரச்சினைகளில் உற்சாகமாக ஈடுபடுகிறான். அளவுக்கதிகமான

குடிபோதையிலும் பாண்டியன் தெருவில் விழுந்து கிடப்பதில்லை. புலன்கள் கலங்குமளவு மதுக்குப்பிகளைக் காலி செய்தாலும், சூழலைக் கட்டுப்படுத்தும் வலிய திறமையுடையவன். எவ்வளவு போதையிலும் அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்பது குறித்துத் தெளிவான முடிவெடுக்கும் வல்லமை அவனுக்குண்டு. பாங்காங் நகரிலிருந்தபோது போதையுடன் 'மூன்லிங்' ரெஸ்டாரண்டிற்கு நண்பர்களுடன் சென்று செய்த கலகச் செயல் மது அருந்தியதன் பின்விளைவு அல்ல. முரட்டுத் துணிச்சலுடன் கையில் பிஸ்டலை உருவிக்கொண்டு எதிரெதிராகப் பலர் பொருதுமாறு சூழல் உருவாகின்றது. பிஸ்டல் ஏந்திய கைகள் குறிபார்த்து இருந்தன. ஒரு விநாடி ஒரு தோட்டா போதும். பலரின் உயிர் ஒரு விநாடி, ஒரு தோட்டாவில் அடங்கி நின்று வேடிக்கை பார்த்தது. ஒரே ஒரு தோட்டா வெடித்தால் போதும்... இந்நிலையிலும் பாண்டியன் ஆழ்ந்த அமைதிக் குரலில், 'துப்பாக்கி விளையாட்டு வேண்டாம். தயை கூர்க' என்கிறான் வலக்கையில் பிஸ்டலுடன். இத்தகைய துணிச்சல் சாகசக் காரனுக்கே உரித்தானது.

நாவலின் அறிமுகக் காட்சியிலிருந்து பாண்டியன் இடைவிடாமல் பயணித்துக் கொண்டேயிருக்கிறான். நாடுவிட்டு நாடு, ஊர்விட்டு ஊர் எனத் தொடர்ந்து சுற்றுகிறான். எந்த இடத்திலும் நிலைத்து நிற்கமுடியாத நிலையில், அவனுடைய மனம் அமைதியற்றுக் கொந்தளிக்கிறது. இறுதியில் டச்சுக் காலனியாதிக்கத்திற்கு எதிராக இந்தோனோஷியாவில் நடைபெறும் கொரில்லாப் போரில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறான். டச்சுக்காரர்களுக்கு எதிரான தாக்குதலில் பங்கேற்று 'ராஜா உத்தாங்கு' வாகிறான். அவன் செயல்ரீதியில் போட்ட திட்டங்கள் பெரும் வெற்றி அடைகின்றன. ஆனால், அவனுடைய மனம், எதிலும் திருப்தியற்று அலை பாய்கிறது. வெற்றியின் காரணமாகக் குதூகலிக்கும் மனநிலையற்ற பாண்டியன், தான் செய்த சாகசச் செயலையும் சாதாரணமாகக் கருதி, அடுத்து என்ன செய்வதென்று யோசிக்கிறான். காட்டு வாழ்க்கை அவனுக்கு அலுக்கிறது. சின்னமங்கலம் கிராமத்திற்கு உடனே போக வேண்டுமென முடிவெடுக்கிறான். 'அபாயங்கள் காத்திருக்கின்றன' என்பது அறிந்தும் வழமையான சாகச மனநிலையுடன் வெளிப்படும்போது, மேஜர் டில்டனால் சுட்டுக் கொல்லப்படுகிறான்.

லேர்மன்தவ் எழுதிய 'நம் காலத்து நாயகன்' நாவல் *1840* ஆம் ஆண்டு வெளியானது. அன்றைய காலகட்டத்தில் ரசியாவில் வழக்கத்தில் இருந்த இருவர் போரில் ஈடுபடுகிற பிச்சோரின் பற்றிய நாவலை எழுதிய லேர்மன்தவ், தன்னுடைய 27வது வயதில் இருவர் போரில் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். நாவலின் தலைப்பு, ரஷிய சமூகத்தில் நிலவிய எதிலும் நம்பிக்கையற்ற இளைய தலைமுறையினரின் மனநிலையை எள்ளலுடன் பதிவாக்கியுள்ளது. காக்கேஷியப் படைக்கு அனுப்பப்பட்ட அதிகாரியான பிச்சோரினை முன்வைத்து ஐந்து பாகங்களில் சொல்லப்பட்டுள்ள கதைகள் புதிய வடிவில் நாவலாகியுள்ளன. உதவிக் காப்டன் நோக்கில் இருந்து பிச்சோரின் அறிமுகமாதல், பயணக் குறிப்புகளில் இருந்து பிச்சோரின் பற்றிய கதைசொல்லியின் அவதானிப்பு, பிச்சோரின் இறப்புச் செய்தி, பிச்சோரின் நாட்குறிப்பு என்று பிச்சோரினுடைய முரண்பாடான இயல்புகள் பதிவாகியுள்ளன.

பேலாவைக் கடத்திவந்து கோட்டைக் காவலில்வைத்திருந்த பிச்சோரிடம் உதவிக் காப்டன் பேசியபோது, அவன் சொன்ன பதில்: என் சுபாவமே துர்பாக்கியமானது எனது புத்திளமையில் நான் உறவினர்களின் அரவணைப்பில் இருந்து வெளியேறிய கணம் முதலே பணத்தால் பெறக்கூடிய எல்லா இன்பங்களையும் வெறி பிடித்தவன்

போலத் துய்க்க ஆரம்பித்தேன். இந்த இன்பங்கள் எனக்கு அலுத்துப் போய்விட்டன என்பது சொல்லாமலே விளங்கும். பிறகு நான் சமூகத்தில் புகுந்து அளவளாவிவினேன். சமூகமும் எனக்கு அலுத்துப் போய்விட்டது. நாகிரிக அழகிகள் மேல் நான் மையல் கொண்டேன், காதலிக்கவும் பட்டேன். ஆனால் அவர்களுடைய பிரேமை, கற்பனையையும் ஆணவத்தையும் தூண்டி விட்டதே தவிர என் இதயம் வெறுமையாக இருந்தது நான் படிக்கவும் கற்கவும் தொடங்கினேன். அறிவியல்களும் எனக்குச் சலித்துவிட்டன. புகழோ இன்பமோ அவற்றைச் சார்ந்தவை அல்ல என்பதை நான் கண்டேன். ஏனெனில் எல்லாரிலும் இன்பம் நிறைந்த மக்கள் அறிவிலிகள். புகழோ வெறும் தற்செயல் வாய்ப்பு. அதைத் தேடிப் போவதற்கு ஒருவன் தந்திர சாலியாக மட்டும் இருந்தால் போதும். இவற்றை எல்லாம் அறிந்தும் அனுபவித்து அறிந்ததும் எனக்கு ஒரே சலிப்பாக இருந்தது அவளுக்காக என் உயிரையே கொடுப்பேன். ஆனால் அவளுடைய சகவாசம் எனக்குச் சலித்துப் போய்விட்டது நான் மடையனா அல்லது கயவனா என்பதை அறியேன் எனது ஆன்மா உலகத்தால் கெடுக்கப்பட்டு விட்டது, கற்பனை அமைதியற்றது, இதயம் அடங்கா வேட்கை கொண்டது. எனக்கு எதுவும் போதுமானதில்லை என் வாழ்வு நாளுக்கு நாள் வெறுமை ஆகிக் கொண்டிருக்கிறது தனிமனித மனதின் வதைக்களமாகத் தன்னையே வதைத்துக் கொண்டு, எல்லாவற்றிலிருந்தும் அந்நியமான மனநிலைக்குள்ளான பிச்சோரின் பாத்திரம் காலங்காலமாக வெவ்வேறு கதையாடல்களில் தொடர்கிறது.

பிச்சோரினுடைய நாட்குறிப்பு என்று லேர்மன்தவ் வெளியிட்டுள்ள கதை, சுவராசியமானது. மனதின் பலவீனங்களையும் குறைகளையும் வெளிப்படையாகப் பதிவாக்கியுள்ள பிச்சோரின் சாகசமும் கலகமும் முக்கியமானவை. யாருடனும் தொடர்ந்து ஒத்திசைந்து போகவியலாத இயல்புடைய பிச்சோரின், தனித்துப் பூமியில் இயங்குகிறான். ஒருவகையில் விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் மரணத்தைப் பொருட்படுத்தாமல் செயல்படுகிற பிச்சோரின் வாழ்க்கையில் இருவர் போர், விதிவாதி போன்ற சம்பவங்கள் குறுக்கிடுகின்றன. சாகசக்காரனுக்குரிய மனநிலையுடன் பிச்சோரின் மரணத்தை எதிர்கொண்டு வெற்றி அடைகிறான். ஏன் இப்படியெல்லாம் அவன் செயல்படுகிறான் என்ற கேள்விக்கு விடை எதுவும் இல்லை. உதவிக் காப்டன் மட்டுமல்ல மருத்துவருடன்கூட பிச்சோரினால் நட்புடன் பழகிட இயலவில்லை. நட்பு பற்றிய மதிப்பீட்டைச் சிதைத்திடுமாறு யோசிக்கிறான்: உளமார்ந்த நட்புகொள்ள நான் வல்லவன் அல்ல. இரண்டு உயிர் நண்பர்களில் ஒருவன் மற்றவனுக்கு அடிமையாக இருப்பான் - அவர்களில் ஒருவனும் இதைப் பெரும்பாலும் ஒப்புக்கொள்ள மாட்டான்.

காதல் என்ற சொல்லை முன்வைத்துப் பிச்சோரின் வாழ்க்கையில் நடைபெறுகிற சம்பவங்கள் கவனத்திற்குரியன. பியாத்தி கோர்ஸ்க் நகரில் ஆரோக்கிய ஸ்தலத்தில் தங்கியிருக்கிற பிச்சோரின் இளவரசியின் கவனத்தைத் திருப்பி, காதல் வயப்படுவதும், பின்னர் இளவரசியின் காதலைப் புறக்கணிக்கிறான். காதல் விவகாரத்தில் பிச்சோரினைப் பிடித்து ஆட்டுகிற பிசாசு எதுவென்ற கேள்வி தோன்றுகிறது. எதிலும் திருப்தி அடையாமல் அடுத்தடுத்த தளத்திற்குப் பயணிக்கிற பிச்சோரின் ஒருவகையில் விநோதமானவன். அந்நிலைமைக்குக் காதலும் விதிவிலக்கு அல்ல. பிச்சோரினின் மேனாள் காதலியான வேரா இன்னொருவரின் மனைவியான பிறகும் தீவிரமாக அவனை நேசிக்கிறாள். எல்லாவற்றிலும் இருந்து விலகியிருக்கிற பிச்சோரின், எதற்காகத் தான் அவள் என்னை இவ்வாறு

காதலிக்கிறாளோ, மெய்யாகவே அறியேன்! அதிலும் என்னுடைய எல்லாச் சிறுசிறு பலவீனங்களுடனும், கெட்ட விழைவுகளுடனும் என்னை முற்ற முழுக்க அறிந்துகொண்ட ஒரே பெண் இவள்தான் தீமை அவ்வளவு கவர்ச்சி உள்ளதா என்ன? என்று நினைக்கிறான். வேராவுடன் உடலுறவு கொள்கிற பிச்சோரின் அவள் அங்கிருந்து கிளம்பிய தகவலை அறிந்தவுடன், குதிரை இறக்குமளவுக்கு விரட்டிச் செல்கிறான். பேலாவைத் தூக்கி வருவதற்காக உயிரை வெறுத்துச் சாகசச் செயலில் ஈடுபடுகிறான். பின்னர் பேலா அவன் மீது காதல் வயப்படும்போது தக்கையாகி ஆர்வமற்று வெறுமையான மனநிலைக்குள்ளாகிறான். பிச்சோரினுக்கும் காதலுக்குமான உறவு வழமையில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. பெண்ணுடல் மீதான ஈர்ப்பு ஒருபுறம் என்றால், பெண் உறவில் சலிப்பு மனநிலை இன்னொருபுறம் துரத்துகிறது.

பிச்சோரினை இருவர் போரில் இழுத்து விட்டு அவனை அவமானப்படுத்திட குரூஷ்நீத்ஸ்க்கியும் காப்டனும் திட்ட மிடுகின்றனர். தற்செயலாகச் சதியை அறிந்து கொண்ட பிச்சோரின் வேதனையடைகிறான். நான் பகைவர்களை நேசிக்கிறேன், ஆனால் கிறிஸ்துவின் போதனைப்படி அல்ல. அவர்கள் எனக்கு வேடிக்கை காட்டு கிறார்கள் என் உதிரத்தைக் குதுகுதுப்பு அடையச் செய்கிறார்கள். எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருப்பது, ஒவ்வொரு சொல்லையும் பார்வையையும் உடனுக்குடன் புரிந்துகொள்வது, நோக்கத்தை ஊகிப்பது, சதிகளைத் தகர்ப்பது, ஏமாந்தவன்போல நடிப்பது, அவர்கள் அரும்பாடுபட்டு எழுப்பிய தந்திரங்களும் சூழ்ச்சிகளும் கொண்ட பெரிய மாளிகையைத் திடீரென ஒரே அடியில் தரைமட்டம் ஆக்குவது - இதைத் தான் வாழ்க்கை என்கிறேன். பிச்சோரின் மனம் எப்பொழுதும் கங்கு போலக் கனன்று கொண்டிருக்கிறது. எல்லாவிதமான தந்திரங்களையும் அறிந்திட்ட நிலையில் எதிராளியான குரூஷ்நீத்ஸ்க்கியைச் சுட்டுக் கொல்கிறான். சக மனிதனின் கொலைக்குக் காரணமாகத் தான் இருப்பது குறித்துப் பிச்சோரினுக்குக் குற்றமனம் எதுவும் இல்லை. பிச்சோரின் உணர்ச்சிகளை மனதில் புதைத்துவிட்டு, பிறருடைய துன்பங்களைப் பொருட்படுத்தாமல் தன்னிச்சையுடன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இயங்கினான். வாலிபத்தில் தன்னுடைய விருப்பம்போல செயல்பட்டுச் சூழலில் இருந்து அந்நியமான இளைஞனை முன்வைத்து எழுதப்பட்ட பிச்சோரின் பாத்திரம் முன்னோடியானது.

ஹெமிங்வேயின் ‘போரே, நீ போ’ நாவலில் போர் தனிமனித வாழ்கையில் எப்படியெல்லாம் சிக்கல்களை உருவாக்குகிறது என விரிந்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த பிரடரிக் ஹென்றி இத்தாலியில் நடைபெற்ற முதல் உலகப் போர்முனையில் ஆம்புலன்ஸ் ஓட்டுநராகப் பணியாற்றுகிறான். ஹென்றி விடுமுறையில் சந்தித்த செவிலியான காதரின் பெர்லியை விரும்புகிறான். போர்க்களப் பின்புலத்தில் இருவருக்கும் இடையில் அரும்பிடும் காதல், காதரின் கர்ப்பமடைவதில் முடிகிறது. உணர்ச்சிகரமான காதல் கதையில் காதரின் மகப்பேற்றின் போது, அதிக குருதிப் போக்கினால் இறந்திட, ஹென்றி சோகத்தில் மூழ்குகிறான்.

காதல் பற்றிய ஹென்றியின் எண்ணம்: ‘நான் அவளுடன் காதல் கொள்ளும் எண்ணமே எனக்கு இல்லை. இது, ஆண்டவனுக்கே தெரியும். யாரிடமும் காதல் கொள்ளும் எண்ணமே எனக்கு இல்லை. ஆனல், இப்போது காதல் கொண்டே விட்டேன் என்பது கடவுளுக்கே தெரியும்.’ அமெரிக்கனான ஹென்றி, இத்தாலி நாட்டில் நடைபெற்ற போரில் பங்கேற்கிறான். போர்முனையில் அன்றாடம் மரணத்தை வேடிக்கை பார்க்கிற ஹென்றி குண்டு வீச்சில்

காயமடைந்து, பின்னர் குணமடைகிறான். படையணிகள் போர்முனையில் இருந்து பின்வாங்கும்போது, ஹென்றி அவனுடைய பேச்சைக் கேட்காத சார்ஜெண்டைச் சுட்டுக் கொல்கிறான். இராணுவப் போலீசார் கொல்வதில் இருந்து தப்பிப்பதற்காக ஆற்று நீரில் குதிக்கிறான், பின்னர் காதரின் பெர்லியை அழைத்துக்கொண்டு, இரவோடு இரவாகப் படகின்மூலம் பெரிய ஏரியைக் கடந்து ஸ்விட்சர்லாந்து நாட்டுக்குச் செல்கிறான். போரின் பேரழிவுடன் மனிதர்கள் அநியாமாகக் கொல்லப்படுக்கிற பின்புலத்தில் காதல் வயப்பட்ட ஹென்றி, சாகசங்கள் மூலம் அடுத்தடுத்துச் செல்கிறான். ஆனால், மருத்துவமனையில் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு, இறந்த காதரினின் இழப்பினை எப்படி அவனால் எதிர்கொள்ள முடியும்? பூமியில் மனித இருப்பு அர்த்தமற்றதா? அபத்தமானதா? என்று ஹென்றி பாத்திரத்தின் மூலம் ஹெமிங்வே எழுப்பியுள்ள கேள்விகள் இன்றைக்கும் பொருந்தும்.

லேர்மன்தவ், ஹெமிங்வே, ப.சிங்காரம் எழுதியுள்ள நாவல்களின் தலைமைப் பாத்திரமான ஆண்கள் ராணுவத்தில் பணியாற்றுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றுவது கூட ஒருவகையில் சாகசம்தான். விட்டேத்தியான மனநிலையுடன் செயல்பட்டாலும் எந்தவொரு ஆபத்தையும் இயல்பாக எதிர்கொள்கிறவர்கள், பெண்கள் விஷயத்தில் மாறுபட்ட கோணத்தில் செயல்படுகின்றனர். பிச்சோரினும் பாண்டியனும் உருக்கத்துடன் காதலிக்கிற பெண்களைப் புரிந்து கொண்டாலும், பெண்களிடம் இருந்தும் விலகி இருக்கின்றனர். ஹென்றி மது, பெண்கள் என உற்சாகத்துடன் செயல்பட்டவன், காதரினுடன் உறவு கொண்டவுடன் சராசரி மனிதனாக மாறுகிறான். மருத்துவமனையில் இறந்து போன காதரினுக்குக் ஹென்றி தந்த முத்தம் சிலைக்குத் தந்ததாகத் தோன்றுகிறது. வாழ்க்கையில் கசப்பு அழுத்தமாகப் பரவுகையில் செய்திட என்ன உள்ளது?

ஜப்பானிய நாவலாசிரியர் ஹாருகி முரகாமியின் நோர்வேஜியன் வுட் நாவல், தன்வரலாற்றுக் கதையாக விரிந்தாலும் சாகசம், சவால் நிரம்பியது. டோரு வாட்டனபி, அவனுக்குப் பிடித்தமான பாப் இசையுடன் தொடர்புடைய பீட்டில்ஸ் பாடலைக்கேட்குபோது, காதல் நினைவுக்கு வருகிறது. இருபதாண்டுகளுக்கு முந்திய மாணவப் பருவத்தில் டோக்கியோ நகரின் அனுபவங்கள் நினைவில் மிதக்கின்றன. வித்தியாசமான நட்பு, கட்டுப்பாடற்ற பாலுறவு, பொங்கிடும் காதல், இழப்பு, ஆசை, சோகம் என்ற உலகிற்கு மீண்டும் திரும்புகிறான். பதின்பருவத்தின் எழுச்சியையும் கொண்டாட்டத்தையும் வீழ்ச்சியையும் விவரிக்கிற நாவல் டோருவின் வாழ்க்கையில் மிடோரி என்ற பெண் குறுக்கிடும்போது, இறந்த காலமா? எதிர்காலமா? என்ற கேள்வியை முன்வைத்துள்ளது.

பள்ளி மாணவியிடம் ஆறு மாதங்களாக உடலுறவு வைத்திருந்த கதைசொல்லியான டோரு, டோக்கியோவில் மேல் படிப்புப் படிக்க வாய்ப்புக் கிடைத்தவுடன் அவளைப் பொருட்படுத்தாமல் கிளம்புகிறான். அந்தப் பெண்ணைப் பற்றி நவோகாவிடம் சொல்கிறான்: அவ அழகானவ, அவளோட படுக்கைக்குப் போனதை நான் ரசிச்சேன், ஆனால் கடைசியில் அவ என்னை வசீகரிக்கல. எனக்குத் தெரியல, என் இதயத்துல பெரிசா நுழைஞ்சிட முடியாத கடினமான முடிச்சு இருக்கிறத சமயங்கள் நான் நினைக்கிறேன். உண்மையிலே என்னால் யாரையாவது காதலிக்க முடியுமானு சநதேகப்படுறேன். பதின் பருவத்தில் பெண்ணுடல் பற்றிய அவனுடைய பார்வை, காதலைப் புறக் கணிக்கிறது. பதினெட்டு வயதில் “மரணம்,

வாழ்க்கைக்கு எதிரானதாக அல்லாமல், அதன் ஒருபகுதியாக இருக்கிறது' என்று யோசிக்கிறான். நகர்ப்புறத்தில் வாழ்கிற பதின்பருவத்தினர் எதிர்கொள்கிற பாலியல் உணர்வுகளையும் வரன்முறையற்ற புணர்ச்சி அனுபவங்களையும் விவரிக்கிற நாவல் முன்வைக்கிற பாலியல் குறித்த பேச்சுகள் கவனத்திற்குரியன. கார்ப்பரேட் உலகின் விளைவாகத்தான் டோரு வாட்டனபி பாத்திரம் புனையப்பட்டுள்ளது.

அஞ்சல் நிலையம் நாவல் ஒருவகையில் சார்லஸ் புக்கோவ்ஸ்கியின் தன்வரலாறு என்று கருதப்படுகிறது. ஹென்றி சின்னஸ்கி, அஞ்சல் நிலையத்தில் கடுமையான வேலைப்பளுவுடன் ஓய்வற்றுச் செயல்பட வேண்டிய பொருளாதார நெருக்கடி. பகலில் முடிவற்ற வேலை, இரவில் மது என தன்னை அடையாளப்படுத்திடும் சின்னஸ்கி, ஒருவகையில் சலிப்புடன் இருக்கிறான். நாவலின் முதல் இயலில் தற்செயலாகச் சந்தித்த பருத்த பெண்ணுடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்கிறான். அதுவும் நான்கு நாட்களில் அவனுக்குச் சலித்து விடுகிறது. புலனடக்கம் குறித்து மதங்கள் ஏற்படுத்தியிருக்கிற தொன்மக் கதைகளைப் புறந்தள்ளிவிட்டு, உடல்களை முன்வைத்து நடைபெறுகிற கொண்டாட்டங்களின் பிரதிநிதியாகச் சின்னஸ்கி இருக்கிறான். குடும்ப அமைப்பு காரணமாகச் சிறிய அளவில்கூட குற்றமனம் இல்லாத சமூகத்தில் சின்னஸ்கிக்குப் பெண்கள் பெரிதும் உடல்களாகத் தெரிகின்றனர். அஞ்சல் நிலையத்தின் முடிவற்ற வேலைகள் குறித்த சார்லஸ்ஸின் விவரிப்பு, ஒருவகையில் ஒருவனைப் பித்து நிலைக்குள்ளாக்கிடும். அமெரிக்கா ஒரு சொர்க்க பூமி என்ற புனைவுக்கு மாறாக விளிம்புநிலையினர் எப்படியெல்லாம் சக்கையாகக் கசக்கிப் பிழியப்படுகின்றனர் என்பதற்குச் சாட்சியாகச் சின்னஸ்கி பாத்திரம். உடல்கள் மீதான வன்முறையில் இருந்து விடுபட எப்பொழுதும் போதை, எந்தப் பெண்ணுடனும் உடலுறவு, விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து, பின்னர் மணமுறிவு. கார்ப்பரேட் உலகில் வேலை என்பது, மனிதனை எல்லாவற்றிலிருந்தும் அந்நியப்படுத்துகிற சூழலில் எல்லாவிதமான மதிப்பீடுகளும் அர்த்தமிழக்கின்றன. சின்னஸ்கியின் பாலியல் செயல்களும் புணர்ச்சிகளும் என விரிந்திடும் கதைகள், ஒருவகையில் அதிர்ச்சியூட்டக்கூடியன. எது குறித்தும் அக்கறை இல்லாமல், விட்டேத்தியான மனநிலையுடன் அலைந்து திரிகிற சின்னஸ்கிக்கு மதுவும் பெண்ணுடல்களும் போதும். பிச்சோரின், பாண்டியன், ஹென்றி போன்ற பாத்திரங்களுடன் ஒப்பிடும்போது, எவ்விதமான நோக்கமும் அற்ற சின்னஸ்கி ஏகாதிபத்திய அமெரிக்காவின் வெளிப்பாடு.

பொதுவாக நடப்பு வாழ்க்கையில் எல்லாவிதமான தந்திரங்களுடன் செயல்பட்டு, மனதில் நினைத்ததைச் சாதிக்கிற சில ஆண்கள், அடுத்தநிலையில் சலிப்பும் கசப்பும் ததும்பிட துயரமடைகின்றனர்; பெண்ணுடல் குறித்த தவிப்பினால், பெண் மனதைப் புரிந்திடாமல் தவிக்கின்றனர். கதைமாந்தர்களான பிச்சோரின், பாண்டியன், சின்னஸ்கி, ஹென்றி, டோரு வாட்டனபி போன்றவர்கள் கடந்த 180 ஆண்டுகாலத்தில் ஆண்களின் பாலியல் குறித்து மரபிலிருந்து மாறுபட்ட தளத்தில் புனையப்பட்டுள்ளனர்; ஆண் கண்ணோட்டத்துடன் தான் கதைமாந்தர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இத்தகைய ஆண் கதைமாந்தர்களில் கணிசமானோர் பிரதிகளில் இருந்து வெளியேறித் தமிழகத் தெருக்களில் அலைந்திடக்கூடும்.

### மூல நூல்கள்

1. சிங்காரம்.ப. புயலிலே ஒரு தோணி. சென்னை: டிஸ்கவரி புக் பேலஸ், 2016.
2. லேர்மன்தவ், மி.யூ. நம் காலத்து நாயகன். பூ.சோமசுந்தரம்(மொ-பெ). மாஸ்கோ; புரோகிரஸ் பதிப்பகம்,1966.

3. எர்னெஸ்ட் ஹெமிங்வே. போரே, நீ போ. எஸ்.எஸ். சிவசாமி (மொ-பெ). பம்பாய்: பெர்ல் பப்ளிகேஷன்ஸ். 1958.
4. ஹாருகி முரகாமி. நோர்ஜியன் வுட். க.சுப்பிரமணியன் (மொ-பெ). பொள்ளாச்சி: எதிர் வெளியீடு, 2014.
5. சார்லஸ் புக்கோவ்ஸ்கி. அஞ்சல் நிலையம். பாலகுமார் விஜயராமன் (மொ-பெ). பொள்ளாச்சி: எதிர் வெளியீடு, 2016.